C.C 249/17
PW 2
பெயர் முருகன்
தேதி 20.03.2023
( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு **317** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

என் மகனுக்கு ஏற்பட்ட காயம் எப்படி ஏற்பட்டது என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் வீட்டிலிருக்கும் போது என் மகனுக்கு காயம் ஏற்பட்டதமாக யார் வந்து சொன்னது என்றால் வெளியூருக்காரர் வந்து சொன்னார் அவர் பெயர் ஞாபகம் இல்லை. என் மகன் இருசக்கரவாகனத்திலிருந்து கிழே விழுந்து அது சம்மந்தமாக தான் மருத்துவமனை சென்றார் என்றால் சரியல்ல. நான் சாட்சி கையெழுத்திட்ட பேப்பரை நான் படித்து பார்க்கவில்லை எனக்கு படிக்க தெரியாது. போலிசார் கேட்டதால் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். அசா1 என்மகன் என்பதால் வழக்கிற்கேற்ப நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.